காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 பங்குனி 18 (31-3-74) | இதழ்: 37

உள்ளே.....

பகையுணர்ச்சி பரப்பாதீர்! (அண்ணாவின் சொற்பொழிவு)

★

பேரருளாளர் பெரியார் (கட்டுரை)

★

ராசாத்தி (சிறுகதை)

★

குட்டிக் கதைகள் ஒரு நூறு

★

மாங்குயிலே! பாடுக நீ!

(புலவர் ஆரணி உமர்)

—★—

சிந்தனைக்குப் போட்டிருந்த மௌனமகப் பூட்டுகளே
நந்தமிழர் நாட்டில் நறுக்கி உடைத்தெறிந்த
தந்தைப் பெரியாரின் தனிப்புகழை எடுத்தோதிக்
குவலயத்துத் திசையெங்கும் கூவாய் கருங்குயிலே!
திமிர்பிடித்த மனுதர்ம முதலைகளுக்கன்னவரோ
அமில நதியானர்! ஆயின் எளியவர்க்கோ
அமிர்த நதியானர்! ஆடகப்பொன் நிதியானர்!
அறிவின் உறக்கத்தை அவர்கலித்தார் என்பதனால்
எரிஉமிழ்ந்து வைதிகம் இடும்சாபம் ஓர்கோடி!
அத்தனையும் தாங்கி அரிமாவைப்போல் வாழ்ந்த
வித்தகரின் பெருமையினை விளம்புகநீ தீங்குயிலே!
பொய்ம்மைக் கோட்டைகளைப் பொடிப் பொடியாய்த் தகர்த்திட்ட
நம்காலம் தனில்வாழ்ந்த நஞ்சருந்தா சாக்ரடீசின்
புகழைநீ பாடிப் பூரிப்பாய் பூங்குயிலே!
அதிர்பாய்ச்சல் பகைவர்களை அணியணியாய்ப் புறங்கண்ட
எதிர்நீச்சல் பெரியாரின் எடுப்பான வரலாற்றை
மதுரக்குரலெடுத்து மாங்குயிலே பாடுக நீ

★

விலை: 0-25 காசு

1. யாருக்குப் பொங்கல்
விலை ரூ. 3-50

2. வைரமூக்குத்தி
விலை ரூ. 2-00

3. புதுமனிதன்
விலை ரூ. 2-00

நூலாசிரியர்:-
கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்,

கிடைக்குமிடம்:-
வசந்தா பதிப்பகம்,
605, முத்துக்குமாரசாமிசாலை,
ஆலந்தூர், சென்னை-16.

இம் மூன்று நூல்களுமே, கவிஞர் கோ. மோகனரங்கன் தீட்டிய கவிதை நாடகங்களின் தொகுப்புக்களாகும். இவற்றில் பெரும்பாலானவை, சென்னை வானொலியில் ஒலிபரப்பாகி பலரது ஒருமித்த பாராட்டுக்களே ஏற்கனவே பெற்றவையாம்.

1. "யாருக்குப் பொங்கல்" என்னும் நூலில் எட்டுக் கவிதை நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. 'அன்புட வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகளேயே கவிதை நாடகங்களாக்கியுள்ளார் நூலாசிரியர். 'கவிதை நடையில் இயற்றியுள்ள இந்த நாடகம் சிறந்த இலக்கிய வகையில் ஏற்கத்தக்கதாகும்' எனப் பாராட்டியுள்ளார், வாழ்த்துரை வழங்கிய சிலம்புச் செல்வர் மா. பொ. சி. அவர்கள்.

மூன்று சகோதரர்கள் மூன்று வேறு வகையில் வாழ்க்கையை நடத்திய கதையே 'தாய்மண்' என்னும் முதல் நாடகமாகும். ஏனைய நாடகங்களிலும் இம்முறையிலேயே பல பாத்திரங்களை, நிறைபடப் படைத்துள்ளார், ஆலந்தூர்க் கவிஞர்.

"பித்தமனம் படைத்தவர்கள்
பேசுகின்ற பழிச்சொல்லே
நித்தமெமை ஆளுகின்ற
சத்தியமே எதிர்த்துநிற்கும்!"

எனப் 'பழிச்சொல்' என்னும் நாடகத்தை முடித்திருக்கும் பாங்கு பாராட்டத்தக்கது.

2. "வைரமூக்குத்தி" என்னும் நூலில் நான்கு கவிதை நாடகங்கள் இடம் பெற்றுள்ளன.

"இந்த வைரமூக்குத்தி ஒளியும் எழிலும் கொண்ட ஒரு கவிதை மூக்குத்தி" என அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றார் அணிந்துரை அருளிய திரு.மீ.ப. சோமசுந்தரம் அவர்கள்.

"தம்கவிதைப் பாங்குக் கேற்ப சொல், இசை, எதுகை, மோனை இலாவகமாக அமைத்துக் கொண்டிருக்கின்றார்" என்று பாராட்டி வாழ்த்துகின்றார், முதுபெரும் எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணன் அவர்கள்.

"ஓலைக் குடிசையிலே
ஒண்டும் பெருங்குடும்பம்
சேலை கிழிந்ததனால்
தெருபோர்க்கா என்மனைவி"

என "இன்பப் பெருவாழ்வு" என்னும் நாடகத்தில், தன் துன்பப் பெருவாழ்வைக் கூறுகின்றான், ஒரு குடிசைவாசி, நல்ல படிப்பிடிப்பு!

"கவிழ்ந்த பாலும் கலத்தில்
நிறையா
கவிழா முன்னர் காப்பதே
சிறப்பு"

என்று 'ஒருமணம்' நாடகத்தில் வரும் ஒப்பற்ற வரிகளைப்போன்று, பலவற்றை நூல்முழுதும் பரக்கக் காணலாம்.

3. "புதுமனிதன்" என்னும் நூலில் ஐந்து கவிதை நாடகங்கள் இடம் பெற்றுள்ளன. "இவ்வைந்தும் அறிஞருடும் நல்ல நாடகங்கள்" என அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார், திரு. தி. க. சண்முகம், அவர்கள்.

'அமைதி' என்னும் நாடகத்தில் நெஞ்சில் குமுப்பம் நிலவுவதற்கான சூழ்நிலையை மணவழகர் என்னும் பாத்திரத்தின்மூலம் படம்பிடித்துக் காட்டுகின்றார் நூலாசிரியர்.

"மகிழ்ச்சி எங்கே மறந்தே விட்டது
பகைத்தே அமைதி; பறந்தே இவ்வீர்;
குருதியில் எரிமேல் குடும்பமே நடத்தும்;
இரவுத் துயில்வும் எழுந்தே மிரட்டும்
நாக்கும் எங்கேத் தொடுவதே இல்லை..."

இப்படி அழுக்கில் கொண்டே போகின்றார், அமைதியற்ற மனநிலையை!

'புதுமனிதன்' நாடகத்தில் வரும் இனியவன் கூறும் இன் மொழிகள்:-

"பெருமைகள் நீங்கப் பதற்குப் பிழையற்ற செயல்வேண்டும்
நல்லுள்ளம் கொண்டுவிட்டால்
நற்செயல்கள் பிறந்துவிடும்
உண்மையோ உண்மையொரு
மனிதனைக் காட்டாது
நன்மனத்தால் நற்செயலால்
மனிதனென மாறிடுவாய்!"

இவைபோன்ற நற்கருத்துக்கள்: நயமான அறிவுரைகள்; கவிஞர் மோகனரங்கம் அவர்களின் நாடகங்கள் அனைத்திலும் இடம்பெற்று ஒளிர்வதைக் காணலாம்.

யாப்பு மரபு கெடாமல் எளிய நடையில் இனிய முறையில் கவிதை நாடகங்களைப் படைக்கும் ஆற்றல் பெற்றவராகக் கவிஞர் மோகனரங்கன் திகழ்கின்றார் என்பதற்கு, இந்த நாடக நூல்களே தக்க சான்றுகளாம். கவிஞரின் நாடகப்பணி தொடர்வதாகுக.

—மணிவேந்தன்

முக்கிய அறிவிப்பு

காகித தட்டுப்பாடு காரணமாக காஞ்சியின் கடந்த 24—2—74, 3—3—74, 10—3—74 ஆகிய கிழமை இதழ்கள் வெளிவரஎலிலே என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். காகிதங்கள் பல மடங்கு விலையேறி இருக்கிறது. மற்ற எல்லா ஏடுகளுமே தனது விலையை உயர்த்தி உள்ளது. ஆனால் "காஞ்சி" இதழில் விலை உயர்த்தப்படவில்லை. எனவே எல்லா நூலகங்களும், சந்தாதாரர்களும் சந்தா தொகையை பிடித்தம் செய்யவேண்டாமென்று வேண்டிக் கொள்கின்றோம்.

உரிமையாளர்,
"காஞ்சி"
காஞ்சிபுரம்-3.

சட்டமன்றத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணு

"திராவிட முன்னேற்றக் கழகம் அரசை ஏற்றுக் கொண்டதை இன்னமும் காங்கிரசுக்காரர்களாலே தாங்கிக்கொள்ள முடியவில்லே; நிமிடத்திற்கு நிமிடம் அந்த எண்ணத்திலிருந்து அவர்கள் தங்களே விடுவித்துக்கொள்ள முடியவில்லே; அதற்குக் காரணம் இருக்கிறது.

இந்த இருபது ஆண்டுகளாக இருக்கின்ற அரசியல் தொடர்பில் காங்கிரசுக் கட்சி அல்லது காங்கிரசுக் கட்சியில் உள்ளவர்களிடையே மதிப்பு வைத்து நாங்கள் பழகுகிறோம். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மதிப்பு வைத்து முன்னேற்றக் கழகத்தை அணுகிப் பழக்மே இல்லே; துவக்கத்துக் இது ஒரு கட்சியா' என்று விவாதித்தார்கள்; இது மழையிலே தோன்றிய காளானேப்போல் அழிந்துவிடும்' என்று தங்களேத் தாங்களே ஏமாற்றிக் கொண்டார்கள்: 'அதற்குப் பொதுமக்கள் ஆதரவு வராது' என்று நம்பினர்கள். அந்த நம்பிக்கையைப் பொதுமக்கள் முறியடித்த பிறகுகூட— இப்பொழுதும்கூட அவர்கள், 'ஏமாற்று வித்தையினுலே ஆட்சிக்கு வந்துவிட்டார்கள்' என்றுதான் நினேக்கிறார்களே தவிர, 'அவர்கள் ஆளவதற்கு இலாயக்கு உள்ளவர்கள்' என்று நினேக்கவில்லே! 'இன்னும் எத்தனே நாளேக்கு' என்ற பேச்சை நாங்கள் பதவியேற்ற நாளிலிருந்து அவர்கள் தங்கஞுடைய பேச்சின் முன்னுரையாகவே கொண்டிருக்கிறார்கள்!

'கவர்னர் அவர்களுடைய பேருரையின் பேரில் இந்த அவையினுடைய உறுப்பினர்கள் பலரும் தத்தமது கருத்துக்களே மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இறுதியாகப் பேசிய எதிர்க்கட்சித் தலேவர், சிறிதளவு ஆத்திரத்தோடு பேசினார்; அவருடைய ஆத்திரத்தை என்னுல் புரிந்துகொள்ள முடிகிறது.

இறுதியிலே அவர் 'திருக்குறள் நிலேக்கு நாடு வந்துவிட்டதா' என்று கேட்டு, 'பசி இருக்கிறது— பிணி இருக்கிறது—பகை இருக்கிறது' என்றெல்லாம் குறிப்பிட்டார்.

நம்முடைய நாட்டிலே பசி—பிணி—பகைமை இன்னமும் இருப்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்; அவர் குறிப்பிட்டபடி, பகை இருப்பது மட்டுமல்லாமல் அது இன்னும் கொழுந்துவிட்டெரிகின்ற அளவுக்குச் சென்று கொண்டிருப்பதையும் நான் உணருகிறேன்; இங்கே பேசப்படுகின்ற பேச்சுக்களிலும் பகைமை குறைக்கப்பட வேண்டும் என்பதிலே நான் மிகுந்த கவலே கொண்டவனுகவும் இருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலேவருடைய பேச்சு, 'பகைமையை ஒழிப்பதற்குப் பதிலாக பகையை வளர்ப்பதற்குத்தான் பெரிதும் பயன்படுகிறது என்பதைச் சொல்வதற்கு நான் வருத்தப்படுகிறேன்.

பத்திரிகைச் செய்திகளிலே இருக்கின்ற தவறுகளாக இருந்தாலும், கூட்டங்களில் நடக்கின்ற கலவரங்களாக இருந்தாலும் அவற்றை நீக்குவதற்கும் போக்குவதற்கும், எல்லா அரசியல் கட்சித் தலேவர்களும், இதழ் ஆசிரியர்களும் ஒன்றுகூடி— ஒருமித்த கருத்துக்கு வந்து—என்னென்ன முறையிலே செய்திகளே வெளியிடுவது? கூட்டங்களே நடத்துவின்றபொழுது, என்னென்ன ஒழுங்குப் படுத்தப்பட வேண்டும்' என்பதிலெல்லாம் அவர்கள் ஒத்த கருத்துக்கு வருவார்களானுல் நான் மெத்தவும் போற்றி வரவேற்கிறேன்.

மதுரையில் எல்லாக் கட்சித் தலேவர்களும் ஒன்றுகூடி சமரச ஏற்பாட்டுக்கு வந்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன்; அது எந்த அளவுக்கு வெற்றி பெற்றது என்பதைப் பற்றிய முழுத்தகவல் கிடைக்கவில்லே; அந்த முயற்சி வரவேற்கத்தகுந்த முயற்சி என்பதால் பாராட்டுகிறேன்.

அரசியல் கட்சித் தலேவர்களும் இதழாசிரியர்களும் பகையை வளர்ப்பதிலே நாட்டம் கொள்ளாமல் இருக்கக்கூடிய முறையில்—அப்படிப்பட்ட முயற்சியிலே எதிர்க்கட்சித் தலேவர் ஈடுபடுவாரானுல் நான் அவருக்குத் தேண் நிற்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கு வங்காளத்திலே காங்கிரசு அல்லாத அரசையும், பாஞ்சாலத்திலே காங்கிரசு அல்லாத அரசையும், வேறு சில இடங்களிலே காங்கிரசு

அல்லாத அரசையும் வரை முறையில்லாத வழிகளில் எல்லாம் சென்று கவிழ்க்க முயற்சி செய்ததற்குப் பிறகு—ஒரு புலி ஒரு முறை இரத்தத்தைக் குடித்து விட்டால் அதை, 'புலி' என்று சொல்லாமல், 'மனி தனைக் கொல்லுகின்ற பிராணி' அல்லது 'மேன் ஈட்டர்' என்ற நிலைக்கு வந்து விட்டதாகச் சொல்லு கிறோம்—காங்கிரசு, இல்லாத ஆட்சிகளெல்லாம் கவிழ்த்துவிட்ட பிறகு, தமிழக அரசை எப்படிக் கவிழ்ப்பது என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது!

அண்மையில் இந்திய தேசிய காங்கிரசுத் தலைவர் திரு. நிஜலிங்கப்பா அவர்களே காங்கிரசுமாநாட்டிலே வெளிப்படையாகப் பேசினார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததைத் தாங்கிக்கொள்ள முடியாததால்தான் எடுத்ததற்கெல்லாம் இந்த ஆட்சியைப் பற்றியும், ஆட்சியினைத்திலேயும் பகையுணர்ச்சி உங்களுக்கு இருக்கிறது!

'இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு நாங்கள் சதி செய்தோமா' என்று பேசினார்கள். நாங்கள் 138 பேர்களாக இல்லாமல் ஐந்தாறு ஓட்டு வித்தியாசத் தில் தோற்பவர்களாக இருந்திருந்தால், 'என் னென்ன செய்திருப்பீர்கள்' என்பதை யூகித்துக் கொள்ள முடியும்; 'என்னென்ன நடைபெறாதிருக் கிறது' என்பதும் தெரியும். 'திருத்தத்திலைகூட் கூட்டுச் சேரமாட்டோம். என்று சொன்ன அகில இந்தியக் காங்கிரசுக் கட்சி, 17 பேர்கள் கொண்ட ஒரு கட்சியை அரசாளலிட்டு அவர்களுக்குத் தூண் செல்வதைப்போல், காங்கிரசுக் கட்சிக்கு ஒரு கேவலமான நிலைமை இருக்க முடியாது என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும்!

'17 பேர்கள் எங்களை ஆதரிக்கிறார்களா' என்று கேட்பதற்கு இல்லாமல், '17 பேர் ஆளுங்கள்; நாங்கள் பக்கத்தணையாகச் செல்கிறோம்' என்று இருப்பது, பத்மினி நடனத்திற்கு புலி வேடக்காரன் தாளம் போடுவதற்கு ஒத்ததாகத்தான் இருக்கும்!

17 பேரைக் கொண்ட ஒரு கட்சியைக் கூப்பிட்டு, 'நீங்கள் அரசு அமைய்ங்கள்; நாங்கள் அதைப் பார்த்துக் கொள்கிறோம்' என்று சொல்லுவது ஒரு கட்சியின் இலக்கணத்திற்கோ, அரசியலுக்கோ ஒத்ததாக எங்களுக்குத் தெரியவில்லை என்றாலும், அது காங்கிரசின் மரபுக்கு ஒத்ததாக இருக்கிறது.

ஏனென்றால், கேரளத்தில் பட்டம் தாணுப் பிள்ளை இடத்தில் குறைவான எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் இருந்த நேரத்தில், 'நீங்கள் முதலமைச்சராக இருங்கள்; நாங்கள்—வெறும் அமைச்சர்களாக இருக்கிறோம்; நம்பூதிரிபாடு அமைச்சரவை இல்லாமல் இருந்தால் அதுவே போதும்' என்று சொன்ன மரபு அவர்களுக்கு இருக்கிறது.

நான், 'மரபு' என்றுதான் குறிப்பிட்டேனே தவிர, அது 'சரியான மரபா—சரியல்லாத மரபா' என்று சொல்லவில்லை'

அந்த மரபின்படி தமிழகத்திலே ஏற்பட்டிருக் கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசை அவர்க ளால் தாங்கிக்கொள்ள முடியாததால்தான், இந்தப் பகை உணர்ச்சியெல்லாம் வருகிறது என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தப் பகை உணர்ச்சியை நீக்குவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னவிதமான யோசனைகளே மேற்கொள்வதாக இருந்தாலும் அதற்கு நண்பனாக நானும் பக்கத்திலே இருப்பதை அவர்கள் பார்க்கமுடியும் என்ற உறுதியை அளிக்க விரும்புகிறேன்.

...ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையைப் புறக்கணித்ததன் விளைவாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று கவர்னர் அவர்கள் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருப்பது சரியான தல்ல; நாங்கள் வேளாண்மைத் துறையிலே இன்னின்ன அளவுக்கு வெற்றி கண்டிருக்கிறோம்' என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

ஒரு பிரச்சினையிலே 'வெற்றியா' 'தோல்வியா' என்ற பார்ப்பதற்கு மூன்று அம்சங்கள் இருக்க வேண்டும்—அதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி; அதற்காகச் செலவழிக்கப்பட்ட பணம்; அதைக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட எதிர்பார்ப்புக் கள்;—இந்த மூன்றுக்கும் ஒத்துவந்தால்தான், 'வெற்றி' என்று கூற முடியும்; அல்லது, தோல்வி, என்று கூறமுடியும். நான்கு பேர் சேர்ந்து ஓட்டப் பந்தயத்திற்கு போகின்றபோது அதிலே கலக்காத ஒருவன், எல்லாம் முடிந்த பிறகு, 'நானும்தான் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றேன்' என்று சொல்வதைப்போல் நீங்கள், 'விவசாயத்தில் வெற்றி பெற்றுவிட்டோம்' என்று சொல்லுவதும் இருக் கிறது!

ஆய்வாளர்கள்—ஒவ்வொருவரும்— பொருளா தார வல்லுநர்கள் ஒவ்வொருவரும், ஐந்தாண்டுத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்ட பணம்—அதற்காகத் தீட்டப்பட்ட திட்டங்கள்—அதை நிறை வேற்றிய முறைகள் ஆகியவற்றைக் கணக்கெடுத்துப் பார்க்கின்றபோது 'ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையில் தோல்வி ஏற்பட்டிருக் கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; அதைத்தான் இங்கே கவர்னர் அவர்கள் குறிப்பிட் டிருக்கிறார்களே தவிர, 'ஐந்தாண்டுத் திட்டங்களில் எதுவுமே நடைபெறவில்லை' என்று கூறவில்லை.

சவலைக் குழந்தைக்கும் — திடகாத்திரமான குழந்தைக்குமிடையே வித்தியாசம் பார்ப்பதற்கு முன்னால் 'எத்தனைமாதக் குழந்தை' என்று கேட்டு —'பத்துமாதக் குழந்தை' என்று பதில் சொல்லிய பிறகு—'10 மாதக் குழந்தைக்கு உள்ள வளர்ச்சி இல்லையே; இது சவலைக் குழந்தையாக இருக்கிறதே' என்று கூறுவது உலக வாடிக்கை! 'முன்பு சுட்டுவிரல் 1½ அங்குலம் இருந்தது; இப்போது 1½ அங்குலம் இருக்கிறது; அவயத்திலேயே நாணயமான அவயத் தைக் குறிப்பிட்டேன்'—என்ற முறையில் விவசாயம் வெற்றிபெற்றிருக்கிறது!

'வளர்ந்திருக்கிறது' என்று சொல்லுவது தங்களுடைய தோல்வியை மறைப்பதற்காகத்தான்! இதைப் பற்றிக் கவர்னர், தமது உரையிலேயே சொன்னதைப் பற்றிக்கூட, 'நாங்கள் சொல்லி கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார்' என்ற அரசியல் பிரச்னைக்குள் புகுவதில்லை.

அப்படியே வைத்துக்கொண்டாலும்கூட, முன்னுலே அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியின் தலைவராக இருந்த திரு. சஞ்சீவையா அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றிக் கொடுத்திருக்கிற விளக்கங்களைப் படித்துப் பார்க்கவேண்டும்; வெகு தொலைவில் உள்ளவர் கூறியதைப் படித்துப் பார்க்க மாட்டோம்' என்று கூறினுல், அவருக்கும் எனக்கும் மிக நெருங்கிய நண்பராள திரு. சுப்பிரமணியம் அவர்கள், 'ஐந்தாண்டுத் திட்டத்தால் ஏற்பட்ட பலன்கள் ஏழை மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற கோபத்திலேதான் காங்கிரசைத் தோற்கடித்து விட்டிருக்கிறார்கள்' என்று சில நிமிஷங்களுக்கு முன்னுல் கோவையில் பேசியதன் பொருளை மறந்துவிட மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

ஆகவே ஐத்தாண்டுத் திட்டங்களினுல் வேளாண்மைத் துறை சரியான அளவு முன்னேற வில்லை' என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டாகி விட்டது; அதை நாங்கள் எடுத்துச் சொல்வதால், நண்பருக்கு ஆத்திரம் வருகிறது.

சில மணிலமாசங்கள்பற்றிக் கதை சொல்லவார்கள் —'அவர் அடித்தது அவ்வளவாக வலிக்கவில்லே; அண்டை வீட்டுக்காரன் சிரித்தானே—அதுதான் தாங்க முடியவில்லே' என்பதைப் போன்றதுதான், 'ஐந்தாண்டுத் திட்டங்களால் வேளாண்மைத்துறை வெற்றிபெற முடியவில்லே' என்பது! ஆனுல் இதை அண்ணுவரை சொல்கிறபோது 'ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது, என்ற கதைப்போக்கில் பேசுகிறார்களே தவிர, அவர்களுக்கே அது தெரியும்.

'ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையில் போதுமான வெற்றி பெறவில்லே' என்பது, இந்தியா முழுவதும்—வெளிநாடுகளிலும் நிபுணர்களின் கருத்தாகும்; அதைத்தான் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டருக்கிறார்கள்.

'ஏ. டி. டி. 27 எது தெரியுமா? நண்பர் சுப்பிரமணியம் கொண்டுவந்தது' என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னுர். சுப்பிரமணியம் அவர்கள் என்னுடைய நண்பர்' என்று சொல்லக்கூடிய உரிமை எனக்குக்கூட இருக்கிறது; 'அது அவர் கண்டுபிடித்தது' என்று பெருமையோடு சொல்வார்களானுல் நானும் கூடவரவேற்பேன்.

1950-ம் ஆண்டு எப். ஓ. ஓ. வின் உலக நாடுகள் அலவையில் விவசாயப் பிரிவுக்காக ஏற்படுத்திய இடத்தில், 'போளுர்' என்ற இடத்தில் முதன் முதலாக மாநாடுகூடி புதிய ரக நெல் விதைகளைத் தயாரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது — இரண்டாவதாக ஜாகர்தாவில் கூடிப் பேசப்பட்டது—அதற்கு அடுத்த ஆண்டில் பாங்காக்கில் கூடி அங்கும் பேசப்பட்டது—அதை நிறைவேற்றிக் கொடுக்கிற பொறுப்பு ஆடுதுறைக்கு அளிக்கப்பட்டது.

இதற்குப் பாத்தியதை கொண்டாட வேண்டும் மென்று சொன்னுல் நண்பர் கருத்திருமன் அவர்கள் வெகுதொலைவு போகவேண்டும்.

நண்பர் சுப்பிரமணியம்தான் கண்டுபிடித்த தாகச் சொல்லுமும்—நம்முடைய தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு: 'பெற்றவர்களைக் காட்டிலும் வளர்த்தவர்களுக்குத்தான் பெருமை அதிகம் கிடைக்கும்; பெற்றுப் போட்டுவிடலாம்! வளர்ப்பு திலேதான் பெருமை இருக்கிறது' என்று-அதுபோல், நாங்கள் அதை நல்ல முறையில் வளர்த்திருக்கிறோம் என்ற முறையில் நண்பர் அவர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

மற்றும் ஒன்றைச் சொல்லுகின்றபோது அவர், 'நான் கொள்முதலுக்கு விரோதி அல்ல' என்று குறிப்பிட்டார்; அதை நான் மிகவும் பாராட்டுவதோடு வரவேற்கிறேன்.

'கொள்முதலுக்கு விரோதி அல்ல' என்பது மட்டுமல்லாமல், 'கொள்முதலே எப்படி இலவுகாசச் செய்யலாம்' என்பதுபற்றியும் பலமுறை யோசனை சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அந்த யோசனை கூறப்பற்றி அதிகாரிகளிடத்தில் கலந்து பேசுகின்ற போது, அதை அவர்கள், 'சரியானது' என்று ஒத்துக் கொள்ளாததால் விவாத நிலையில் இருக்கிறதே தவிர, அவர் சொல்லுகின்ற யோசனைகள் புறக் கணிக்கப்பட்டு விட்டன என்று மனத்தாங்கல் கொள்ளத் தேவையில்லே; இன்னும் ஆராய்ந்து பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

இன்னுென்றும் அவர் சொன்னுர்—'நீங்கள் நெல் விலையை அதிகப்படுத்துங்கள்; நான் மத்திய அரசை ஒரு கை பார்க்கிறேன்' என்று!

'ஒருகை பார்க்கிறேன்—ஒருகை பார்க்கிறேன்' என்பது, தமிழகத்தில் தவருக வந்துவிட்ட ஒரு பழ மொழி. இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு பார்க்கலாமே! ஒருகை ஒரு காரியத்திற்கும், மற்றெரு கை இன்னெரு காரியத்திற்கும் என்று இருக்கத் தேவையில்லே!

மத்திய அரசு இதுபற்றி ஆராய்ந்து பார்த்து அவர்கள் கொடுத்திருக்கின்ற காரணத்தைத்தான் நாங்கள் ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கிறோமே தவிர, 'அதையொட்டித்தான் நாங்கள் நடந்து கொள்கிறோம்' என்று நான் சொல்லவில்லே.

புது ரக நெல் வந்திருப்பதை எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துக்கொண்டபிறகு — அந்தப் புது நெல்லால் விளைச்சல் அதிகமாகிறது என்பதை ஒத்துக்கொண்ட பிறகு—ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில் அதிக நெல் கிடைக்கும்போது—ஒரு ஏக்கர் நிலத்தில் கிடைக்கக்கூடிய வருவாய் இயற்கையா கவே அதிகரித்திருக்கும், மேலும்—அதிக விலைகூடக் கொடுக்காமல் அவர்களுக்கு ஆதாயம் அதிகமாகிறது என்பது சாதாரண ணக்கு. அப்படியிருக்கும்போது, போனுல் மூன்று ரூபாய் விலையோடுகூட கூட்டி 48 ரூபாய் அளவிற்கு இன்றையத் தினம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

ஆகவே, கொள்முதல் விலையை அதிகப்படுத்தத் தேவையில்லே என்பதற்கு எங்களுக்குத் தெரிந்த

நியாயமும் இருக்கிறது; அந்த நியாயத்தை ஆதரிக்கும் முறையில் மத்திய அரசிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மத்திய அரசு சொன்னது மட்டுமல்ல—திட்டக் குழுத் தலைவர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, சொள்முதல் விலையை அதிகப்படுத்த வில்லை—அதிகப்படுத்தவில்லை' என்ற பேச்சை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக் கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்று கருதுகிறேன்.

இன்னொரு வகையில் பார்த்தால், இவர்கள் 'நெல்லுக்கு அதிக விலை வாங்கிக் கொடுக்கவேண்டும்' என்ற நல்லெண்ணத்தோடுகூடப் பேசுவதாகத் தெரியவில்லை. எப்படியாவது இந்த அரசுக்கு ஒரு பொருளாதார நெருக்கடியை உண்டாக்கலாமா என்பதுதான்!

அதனால்தான் அவர்கள், ரூபாய்க்கு ஒரு படி அரிசி இங்கு மட்டும் போடுகிறார்களே—மற்ற இடங்களுக்கு ஏன் போடவில்லை; எல்லா இடங்களுக்கும் போடுங்கள்' என்று கூறி, "நெல்லுக்கு அதிக விலை கொடுத்து வாங்குங்கள்—அதிக விலை வாங்கி எல்லா இடங்களுக்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டு வரவு—செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியாமல் நீங்கள் திண்டாடுங்கள்—அதை நாங்கள் வேடிக்கை பார்க்கிறோம்—வேடிக்கை பார்த்து, மத்திய அரசிடம், 'இவர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியவில்லை; ஆகவே திண்டாடுகிறார்கள்' என்று எடுத்துச் சொல்லி—அதற்கு ஏதாவது இந்திய அரசியல் சட்டத்தில் ஒரு வழி இருக்குமானால்—அவர்களே நீக்க முயற்சிக்கிறோம்" என்று, அந்தப் பழைய இடத்திற்குத்தான் போகிறார்கள்!

நான்கூட வேடிக்கையாகச் செய்வதானால், இப்போது எல்லா இடங்களிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று உத்திரவு இட்டுவிட்டு—இருக்கிற அரிசியை எல்லா இடங்களுக்கும் அனுப்புவோடச் சொல்லி-ஒரு மூன்றுமாத காலத்தில் வரவு-செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியாது' என்பதைச் சொல்லிவிட்டு—நாங்கள் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறோம் என்று சொல்லிவிடுவேனானால். அடுத்த ஆறு மாதங்களுக்கு வேண்டுமானால் உங்களுக்கு சற்று நிம்மதியிருக்கலாம்—குடியரசுத் தலைவர் ஆட்சி இருக்கிறபோது!

ஒன்றை உங்களிடம் திட்டவட்டமாகச் சொல்லு கிறேன்—மக்களுக்கு நன்மை செய்ய முடியாது' என்று திட்டவட்டமாக எனக்குத் தெரிந்தால், தெரிந்த மறுகணமே நான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கமாட்டேன்!

அப்படி ஆட்சிப் பொறுப்பில் நான் இல்லாத நேரத்தில் மறுபடியும் நீங்கள் வெகு சுலபத்தில் உள்ளே வருகிறபடி வழியை வைத்துவிடுவேன் என்று நீங்கள் கருதவேண்டாம்!

நான் விலகிவிட்டால் நீங்கள் உடனே வந்துவிட லாம் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு இந்தக் காரியத்தில் ஈடுபடவேண்டாம்!

இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இந்த சட்டமன்றத்தில் நான் பேசுகிறபோது, ஒவ்வொரு நாளும், 'இதுதான் கடைசிப் பேச்சாக இருக்கலாம்' என்ற எண்ணத்தோடுதான் நான் பேசிக்கொண்டு வருகிறேனே தவிர அப்படியே குச்சு அடித்து இங்கேயே உட்கார்ந்து இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அல்ல என்பதை— 'இவர்களைக் கவிழ்க்கலாமா? இந்த அரசை நீக்க லாமா?' என்ற எண்ணம் கொண்டுள்ளவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

'வேளாண்மைத் துறையில் இவர்கள் ஒன்றும் செய்யவில்லை' என்பது மட்டுமல்ல—'நாங்கள் எவ்வளவோ தொழிற்சாலைகளை ஆரம்பித்து வைத்தோம்; இவர்கள் வந்து தொழிற்சாலைகளை எல்லாம் மூடிவிட்டார்கள்' என்று சொன்னார்கள்.

ஆந்திராவில் காங்கிரசு அரசாளுகிறது—அங்கு 1967 மார்ச்சிலிருந்து செப்டம்பர் வரையில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லீசென்சு தரப்பட்டிருக் கிற தொழில்கள் 6; ஆரம்பிப்பதற்காக வந்திருக்கிற கடிதங்கள் 2!

மைசூரில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லீசென்சு கொடுத்திருக்கிற தொழில்கள் 5; கடிதம் வந்திருப்பது 2!

சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லீசென்சு கொடுக்கப்பட்ட தொழில்கள் 10; 'புதிதாகத் தேவை' என்று கடிதங்கள் வந்திருப்பது 6!

ஆகவே, நாங்கள் வந்தபிறகு, தொழில்கள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன' என்று சொல்வது உண்மைக்கு மாறானது என்பது மட்டுமல்ல— காங்கிரசு அரசாளும் இடங்களைவிட ஒரு படி அதிகமாக இங்கு தொழில்கள் வளர்ந்திருக்கிறதே தவிர, குறையவில்லை!

பேரருளாளர் பெரியார்

பெரியார் பேரருளாளர்; பேரன்பினர்; பேரற வோர்; பெருந்தலைவர்; மக்கட் பண்பு பேணி யவர்; அவர்க்கிடமாக மக்கள் தன்மை சிறப்படைதற்குப் பாடுபட்டவர் உலக வரலாற்றிலேயே வேறு எவரு மிலர்.

ஆனால்,

அத்தகைய சான்றோரான பெரியாரைப்பற்றி மிகமிகத் தவறான விளம்பரத்தை நெடுங்காலமாக நேர்மையற்றவர்களும், பொய்ம்மை போற்றும் ஏடு களும், அறநெறியை மதிக்காத அமைப்புகளும், ஆராய்ச்சித் திறமில்லாத கயவர்களும் செய்து வந்துள்ளனர்.

பெரியார் கூறுவதை அப்படியே திசை மாற்றிக் காட்டி, ஆய்வறிவில்லாத மக்களை எரிச்சலடையச் செய்வது பல ஏடுகளுக்குப் பழக்கம்! மக்களுக்குப் பகுத்தறிவு மனப்பான்மை வந்து விடக்கூடாதே என்ற ஆற்றாமையால், அச்சத்தால் சுரண்டிப் பிழைப் போர் பெரியார் மீது மக்களைச் சீற்றமும் வெறுப்பும் பகையும் கொள்ளுமாறு தூண்டி விடுகின்றனர் என்பதை அறிவுள்ளோர் யாவரும் உணர்வர்.

பெரியார் உலகில் உள்ள எல்லா மக்களையும் மிகமிக விரும்பி அன்பு பாராட்டினர். எல்லா மக்க ளின் நலனுக்கும் நல்வாழ்வுக்கும் உரிமைக்கும் தம் வாழ்க்கை முழுதும் போராடினர். அவர் எவரை யும் வெறுத்ததில்லை; பழித்ததில்லை; பகைத்ததில்லை.

திருடனை வெறுக்கிறோம் என்பதற்காக நம்மை வெறியர் என்று ஏற்றுக் கொள்கிறோமா?

கொலை செய்ய வருபவனை எதிர்ப்பதைக் குற்றம் என ஒத்துக்கொள்கிறோமா?

கற்பழிக்க முயல்பவனைப் படைப்பது தவறுகுமா? அதுபோலவே,

நம் நாட்டில் குற்றம் புரியும் கூட்டத்தைப் பெரியார் பழித்தார்; திருத்த முயன்றார். இதைத் தவறு என்பது அறமாகுமா என எண்ணுங்கள்.

உலகிலேயே மக்களையும் மக்கள் தன்மையையும் மிகமிகப் போற்றி அன்பு பாராட்டிப் பாடுபட்ட வர் பெரியாரே. மக்களை மக்களாகியவர் பெரியார்; கிலர் பலரை அடிமைகளாக்கி வைத்திருந்தனர் இந் நாட்டில்! அடிமைகளுக்கு உரிமை உணர்வையூட்டி யவர் பெரியார்!

சிலர் கொள்ளையடிக்கப் பலர் செல்வமிழக்கும் நிலையைக் கண்டித்தார் பெரியார்! இதனால் திருடர் களுக்குச் சீற்றம் வரும்! ஆனால் பிறர் போற்றி நன்றி பாராட்ட வேண்டுமல்லவா?

உண்மைக்காக, நேர்மைக்காக, அறத்திற்காக, மக்கள் தன்மைக்காக, அறிவுக்காக, விடுதலைக்காக, பண்பாட்டுக்காக, ஆராய்ச்சித் திறனுக்காக, மொழி யுரிமைக்காக, நாகரிக மறுமலர்ச்சிக்காக, கலியின் விளக்கத்திற்காக, அடிமைத் தனிநீக்கத்திற்காகப் பாடுபட்டவர் பெரியார் ஒருவரே!

கடவுள் பெயரால், கோவிலின் பெயரால் சமயத் தின் பெயரால், சாதியின் பெயரால், மூட நம்பிக்கை களின் பெயரால், சாத்திரங்களின் பெயரால் சுட்டுப் பாடுகளும் முள்வேலிகளும் அமைத்து, இயற்கையான வாழ்வியக்கத்தைக் கெடுத்து, மக்களை மாக்களாக்கி யவர்களைப் பெரியார் சாடினார்!

நோயை வெறுப்பது நோயாளியை வெறுப்ப தாகாது. நோய் நீங்கும்வரை நோயாளி கசப்பு மருந்துண்டுதான் தீரவேண்டும்!

தீமையை வெறுப்பது நல்லதா? கெட்டதா? கொடுமையை வெறுப்பதுதானேகடமை? கயமையை ஒழிப்பதுதானே சான்றுண்மை? இழிவை ஒழிப்பது தானே நிறப்பு? பொய்யைப் பொசுக்கினால்தானே வாய்மை வெல்லும்? கனவைக் கலைந்தா லொழிய கவலை மாறுமா? அடிமைத் தனியை அறுத்தா லொழிய உரிமையொளி தோன்றுமா? சுரண்டலை முற்றும் ஒழித்தால்தான் சுவை வாழ்வை மக்கள் அனுபவமுடியும்.

இவையெல்லாம் நல்லது என்பவர்கள் ஞால மதை பெரியாரின் பெருந் தொண்டினை—வரலாற் றுப் பணியினை—மரபின் ஆக்க உழைப்பை நெஞ் சுருவிப் போற்றுவார்கள்!

பெரியார் மக்கள்மீது அளவற்ற அன்பு கொண் டிருந்தார். ஆனால், மக்களுக்கு அவர் அன்பை உணருக் ஆற்றல் போதிய அளவில்லை. அவரன்பைத் திரையிட்டு மறைத்துத் திரிந்த நீயவர்களை மெய்யர் கள் என மக்கள் நம்பி ஏமாந்தனர்.

கடவுள், சமயம், வேதம், சாத்திரம், வடமொழி, மிருதி, மனு, மூடநம்பிக்கைகளின் இழுக்குகளை, அழுக்குகளை அணுவணுவாக அலசி ஆராய்ந்து அம்ப லப்படுத்திய அறிவியல் அறிஞர்; ஆராய்ச்சிப் புலவர் தான் இயற்கை மேதை பெரியார்!

மக்களுக்குத் தீமை பயப்பனவற்றைத் தீர்த்துக் கட்டப் பாடுபட்ட திருத்தொண்டர்தான் பெரியார்!

உண்மையை உரைக்க அஞ்சாமல் பாடுபட்டவர் புலவர் அல்லரோ? தான் துன்பப்பட்டாலும்

புலவர் கி. நா. அறிவழகி

கோடிக்கணக்கான மக்கள் அறிவும் ஆற்றலும் உரிமையும் அக்கறையும் அடையவேண்டும்; முன்னேறவேண்டும் என்னுங் குறிக்கோளை ஏற்று, அதையே முழங்கி, அவ்வழியில் வாழ்ந்து வரலாறுக் மலர்த்தவர் பெரியார் ஒருவரே!

முன்னர் தீண்டாமையை ஆணவக் குரலில் முழங்கி அதிகாரக் குரலில் கூறியவர்கள், இன்றும் அச்சக் குரலில் முழங்கிக் கொண்டுதான் இருக்கின்றனர் என்பதை நாடு மறக்கக்கூடாது.

பெரியாரின் பெருந் தொண்டால் தமிழ் உயர்ந்தது; தமிழினம் தலை நிமிர்ந்தது; தன்மானம் சிறந்தது; வாழ்வியலில் பலதுறைகளில் தமிழர் முன்னேறினர். பல்லாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டிருந்த தமிழினம் பெரியாரின் ஒரு நூற்றாண்டு வாழ்வால் புதிய வரலாறு படைத்துக்கொண்டிருக்கிறது என்பதைப் பெருமிதத்தோடு கூவுகிறோம்!

பெரியார் நன்றியை எதிர்பார்த்துப் போராடவில்லை. தமிழர்கள் நன்றியுணர்வற்றவர்கள் என நன்குணர்ந்தே பாடுபட்டார். கைம்மாறு எதிர் நோக்கி அவர் கருத்துக் குவியலை வழங்கிஞரல்லர்! கடமை கருதிக் கண்ணுங் கருத்துமாகத் தொண்டாற்றினார்! முதுமையையும் மதிக்காது மக்கள் பணி புரிந்த மூதறிவாளர் பெரியார் என எண்ணும்போது மனமுள்ளோர் கண்களில் வழியுமது சுரக்காதோ!

இந்த நாட்டின் குறைபாடுகளுக்கு 'மூலத்தை' முதலில் கண்டுணர்ந்த தேர்ந்த மருத்துவர் பெரியாரே. அவர் தமது 93ஆம் ஆண்டு பிறந்தநாட் செய்தியில் உணர்த்தும் அறிவுரையை நாம் மறத்தலாகாது.

"உண்மையில் எனது தொண்டு சாதி ஒழிப்புத் தொண்டுதான் என்றாலும், அது நமது நாட்டைப் பொருத்தவரையில் கடவுள், மதம், சாத்திரம், பார்ப்பனர் ஒழிப்பும் பிரசாரமாகத்தான் முடியும். இந்த நான்கும் ஒழிந்த இடம்தான் சாதி ஒழிந்த இடமாகும். இவற்றில் எது மீதி இருந்தாலும் சாதி உணர்மையிலேயே ஒழிந்ததாக ஆகாது. ஏனெனில், சாதி என்பது இந்த நான்கிலிருந்தும் ஆக்கப்பட்டதேயாகும்.

இப்போதும் சொல்லுவேன்; நாகரிகத்திற்காகச் சிலர் சாதி ஒழியவேண்டும் என்று கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் மேற்கண்ட நான்கையும் ஒழிக்கத் துணிவு கொள்ளமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களால் நமக்கு ஒரு பயனும் ஏற்படாது. சில சமயங்களில் அவர்கள் நமக்கு எதிரிகளாகவும் ஆகக்கூடும். மனிதனை மடையனாக்க, அடிமையாக ஆக்கப்பட்டப் பின்புதான் சாதி புகுத்தப்பட்டதாகும். சுதந்திர உணர்ச்சியும் அறிவும் ஏற்படாமல் சாதியை ஒழிக்க முடியாது. மடமைக்கும் அடிமைத் தன்மைக்கும் ஆக்கம் அளித்துச் சாதியை நிலைநிறுத்துவதுதான் சரஇயை ஒழியாமல் பாதுகாப்பதுதான் கடவுள், மதம், சாத்திரம், பார்ப்பனர் என்பவையாகும்."

இது நிட்டவட்டமான உண்மையே. ஏன்? சாதி மூன்ற மனு நூலில் எவ்வாறு நிட்டமிட்டு வற்புறுத்தப்படுகிறது என்பதை நாம் உணரவேண்டும் — இதோ :—"அக்கினி எப்படி மேலான தெய்வமாகின்றதோ அப்படியே பிராமணன் ஞானியாயினும் மூன்று மினும்— அவனே மேலான தெய்வம்." (மனு : அ. 9; சு. 317).

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவே நெஞ்சையள்ளும்

சுர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

ஜுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

"பிணத்தை எரிக்கும் தீ, யாகத்திற்கும் பயன் படுதல்போலத் தீமையான காரியங்களைச் செய்யும் பிராமணர்களும் பூசிக்கப்படுவர். ஏனெனில் அவர்கள் உயர்குலத்தார் அல்லரோ?" (மனு: அ. 9, சு. 318)

"சூத்திரன் இம்மையிலும் மறுமையிலும் பிராமணனுக்குப் பணிவிடை செய்யவேண்டும்." "சூத்திரன், மனம் வாக்குக் காயங்களால் பிராமணனுக்குத் தொண்டு செய்யவேண்டும். பிராமணனில்லாத விடத்தில் சத்திரியனுக்கும், அவனுமில்லாதவிடத்தில் வைசியனுக்கும் தொண்டு செய்யவேண்டும்." (மனு.—அ. 9. சு: 334-335).

"பிராமணன் கூவி கொடுத்தோ, கொடாமலோ சூத்திரனிடம் வேலை வாங்கிக் கொள்ளலாம். ஏனெனில் பிராமணனுக்குத் தொண்டு செய்யவே சூத்திரன் பிரமனால் படைக்கப்பட்டிருக்கிறான்" (மனு-அ: 8, சு. 414).

"மற்ற மூன்று வருணத்தார்க்கும் தொண்டு செய்யும் படி சூத்திரனுக்கு அரசன் கட்டளையிடவேண்டும்- அப்படிச் செய்யாவிடில் உலகம் அழிந்துவிடுமாகையால், சூத்திரனே தண்டித்துப் பணிவிடை செய்விக்கவேண்டும்." (மனு: அ. 8. சு, 410).

"சூத்திரன் தேடிய பொருள்களைப் பிராமணன் தடையின்றிக் கைப்பற்றிக் கொள்ளலாம்; ஏனெனில் அடிமையாகிய சூத்திரன் எவ்வித பொருளுக்கும் உரியவனாமாட்டான்" (மனு: அ. 8. சு: 417).

"பிராமணனின் பொருளை எடுத்த சூத்திரனுடைய அங்கங்களை வெட்டிக் கொல்லவேண்டும்; ஆனால் சூத்திரனுடைய பொருள்களைப் பிராமணன் தான் விருப்பியபடி கொள்ளையிடலாம்" (மனு: அ. 9, சு: 248)

"பிராமணனுடைய தொழிலைச் சூத்திரன் செய்தாலும் பிராமணனுகமாட்டான், அவனுக்குப் பிராமணத் தொழில் செய்ய அதிகாரமில்லை. பிராமணன் சூத்திரனுடைய தொழிலைச் செய்தாலும் அவன் உயர்குலத்தவனேயாவான். இப்படியே பிர்மா நிச்சயித்துள்ளார்" (மனு. அ. 10, சு: 75)

"பிராமணனைக் காப்பாற்றும் பொருட்டுப் பொய் சொன்னாலும் குற்றமில்லை. பிராமணரல்லாதாரைக் கொன்றாலும் பாவமில்லை. (மனு: அ. 8, சு: 112-143).

"பிராமணனைச் சூத்திரன் திட்டினால் அவன் நாக்கையறுக்கவேண்டும். பிராமணனுடைய சாதிப் பெயர்களைச் சொல்லித் திட்டும் சூத்திரன் வாயில் காய்ச்சிய இரும்புக் கம்பியை எரிய எரியச் செருக வேண்டும் (மனு-அ. 8; சு. 280).

"சூத்திரன் மற்ற மூன்று வருணத்தாருடைய மனைவியைப் புணர்ந்தால் அவன் உயிர் போகும்வரை தண்டிக்க வேண்டும்" (மனு. அ. 8 – சு 359).

(பிராமணனுக்கு எவ்வகைத் தண்டனையுமில்லை)

உயர்குலப் பெண்ணைப் புணர்ந்த இழிகுலத்தோனே இறக்கும் வரையில் அடிக்கவேண்டும்."

"கட்டுக்கடங்காமல் இட்டப்படி நீரழிப்பிராமணப் பெண்களைச் சூத்திரன் புணர்ந்தால் ஆண் குறியை அறுக்க வேண்டும். ஒருவர் கட்டுக்குட்பட்ட பெண்களைப் புணர்ந்தால் அவனைத் தண்டித்து நூறாயிரம் பெட்டி அவன் பொருளெல்லாம் கொள்ளையிடவேண்டும்." (மனு. அ. 8; சு. 374).

பிராமணன் எத்தகைய கொடிய குற்றங்களைச் செய்தாலும் அவனுக்குத் தூக்குத்தண்டனை ஒருபோதும் தூக்கில் இடக்கூடாது. அவன் தலையை மொட்டை அடித்தல் வேண்டும். அதுவே அவனுக்குத் தூக்குத் தண்டனைக்கு ஒப்பாம். மற்ற வருணத்தார்க்குக் கொலையே தண்டனை." (மனு : அ. 8 - சு : 379).

"கொடிய குற்றம் செய்தவனுமினும் பிராமணனைக் கொல்லாமலும் வேறு எத்தகைய துன்பமும் செய்யாமலும் பொருளைக் கொடுத்து அவனை அயலூருக்கு அனுப்பிவிட வேண்டும். எத்தகைய குற்றஞ் செய்தாலும் பிராமணனைக் கொலை அரசன் நினைக்கலாகாது," (மனு - அ. 8; சு. 380-381)

"சூத்திரன் எவ்வளவு நிறமையுள்ளவனுமினும் தனக்கெனத் தனியாகப் பொருள் சேர்த்து வைக்கலாகாது. சூத்திரனிடம் பொருள் இருந்தால் பிராமணனுக்குத் துன்பம் வரும். (மனு: அ. 10 - சு: 129)

"பிராமணன் உண்டு மிகுந்த உணவும், கட்டிக் கிழிந்த உடையும், சுவையும் சாரமுமற்ற தானியங்களையும் பிராமணன் பார்த்துச் சூத்திரனுக்குக் கொடுக்கவேண்டும்." (மனு - அ. 10. சு. 125).

"பிராமணன் வைசியனிடமுள்ள பொருளைக் கேட்டு கொடுக்காவிடில் வலிமையாலாவது கலவிலாவது யாகத்திற்கு வேண்டிய பொருளைப் பிராமணன் எடுத்துக் கொள்ளலாம். வைசியனிடமில்லாவிடில் சூத்திரன் வீட்டிலிருந்துஎராளமாக,ஆராய்ச்சி செய்யாமலே கேளாமலேயேவலிமையினுற் கொள்ளையிட்டு எடுத்துக் கொள்ளலாம்." (மனு - அ. 11, சு. 12-13).

"தரும நிந்தனையுள்ள அரசன் இவ்விதம் கொள்ளையிட்டு யாகம் செய்யும் பிராமணர்களைத் தண்டிக்கக்கூடாது, அரசனின் அறியாமையால் பிராமணன் பசித் துன்பத்தை அடைகிறான்" (மனு - அ. 11— சு : 21).

"பிராமணனுக்கு வேதம் ஒதலே தவம்; சத்திரியனுக்கு இந்நூலில் சொன்னபடி செய்தலே தவம் வைசியனுக்கு வர்த்தகம் செய்தலே தவம். சூத்திரனுக்குப் பிராமணருக்குப் பணிவிடை செய்தலே தவமாகும்." (மனு. அ. 11 சு-235).

"இதில் சொல்லும் கருமங்களில் தவறிய அரசன் மலம், பிணம் இவைகளைத் தின்னும் கடபூதம் என்னும் பேயாகப் பிறப்பான். மேற்சொன்ன வேத— மிருதிகளுக்கு அடங்காமல் மாறுபட்டு நடக்கும் சூத்திரன் சீலப் பேயத் தின்னும் பேயாகப் பிறப்பான்." (மனு. அ. 12 - சு. 71, 72).

"பிராமணனுக்குச் சூத்திரப்பெண்ணிடம் பிள்ளை பிறந்தால் அப்பிள்ளைக்கு அப்பிராமணன் சொத்தில் உரிமையில்லை. அப் பிள்ளை சிரார்த்தம் செய்ய

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,

தமிழ்நாடு அரசு.

லாகாது: அவன் உயிரோடிருப்பினும் பிணத்துக்குச் சமானமானவன்" (மனு. அ. 9 – சு. 155-178).

இப்படிப்பட்ட நூல் அற நூலாம்! அருள் நூலாம்! கடவுள் போற்றியருளிய நூலாம்! பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் குறள்நெறி போற்றிய நாட்டில் மனு நூலைக் காட்டி ஏய்த்துப் பிழைத்தவர்களே இடித்துக்கூறிய பெருந்தொண்டை —வீரப் பணியை—ஆண்மையைச் செய்தவர் நம் பெரியார்!

பெரியார் மட்டும் பிறவாமலிருந்தால் மனு நூலின்படிதான் இந்நாட்டில் தமிழர்கள் அடிமை களாய் — இழி பிறவிகளாய் — ஒடேந்திகளாய் — உயிருள்ள பிணங்களாகக் கிடந்திருப்பார்கள்! இன்றுள்ள வாழ்வு தமிழருக்கு வாய்த்திருக்குமா என்பதை அறிவுள்ள தமிழர்கள் எண்ணிப் பார்த்துத் தம் நெஞ்சில் கைவைத்து விடை கூறவேண்டும்.

பெரியாரால்தானே நாம் மானத்தோடு, ஆண்மையோடு, உரிமையோடு, பெருமையோடு, ஆற்றலோடு வாழ முடிகிறது! அத்தகு வாழ்வை யளித்த வள்ளலுக்கு நாம் என்ன வகையில் நன்றி தெரிவிக்க முடியும்?

பெரியார் அருளிய பெருமை மிக்க நெறியில்— பகுத்தறிவாளராக வாழ்வதொன்றே போதும்!

பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்களே உல கெலாம் பரப்பி அவர் புகழ்மிகு வரலாற்றை என் றென்றும் நிலைநாட்டுவது நாம் சிறப்பாக வாழ்ந்து வளர உதவும்!

தனக்குவமையில்லாதார் பெரியார்! அவர் கொள்கை சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிதுதான்!

பெரியாரின் பேச்சுகள், எழுத்துகள் எல்லாம் நாட் டுடைமையாக்கப்பட வேண்டும். தமிழக அரசும், பெருஞ் செல்வரும் சேர்ந்து அந்நூல்களைப் பதிப்பித்து எல்லாக் கல்வி நிலையங்களுக்கும், நூலகங்களுக்கும் விலையின்றி வழங்கவேண்டும். பெரியார் கருத்துகள் பரவுவது ஒன்றே பெரியாருக்கு அழிவில்லாத நினைவுச் சின்னமாகும்.

தமிழர்களே, பெரியாரின் கருத்துக்களே உலகெலாம் பரப்ப ஆவன செய்புங்கள்!

வெல்க பெரியாரின் கொள்கை!

வாழ்க பெரியார்புகழ்!

சிறுகதை

ரயில் பாலத்தின் மீது ஒன்பது மணி பாஸஞ்சர் ஒவென்று கூவிக்கொண்டு ஓடியபோது குஞ்சம்மா விழித்துக் கொண்டாள். புகை வண்டியின் தட தடப்பு ஓசை அவளுக்குப் பழக்க மானதுதான், ஆனால் இன்று, அந்தப் பாலத்தின் மீது ஓடுகிற வண்டிகளெல்லாம் அவளது தலையிலேயே உருண்டு உருண்டு ஓடுவதுபோல் அவளை உலுக்கிக் கொண்டிருந்தது.

பாலத்தின் அடியில் பாதையின் ஓரமாய் புகைபடிந்து கருத்திருந்த தென்னங் கீற்றுக் குடிசையில் பசி மயக்கத்தோடு படுத்திருந்த குஞ்சம்மா எழுந்து உட்கார்ந்தாள். வெறுமையாய்க் கிடந்த வயிறு உணவுக்காக இரைந்தது. விழிகள் நிலை கொள்ளாமல் அங்குமிங்கும் தவித்து அலைந்த பின், அருகே இருட்டில் உடல்சச் சுருட்டிக் கொண்டு படுத்திருந்த மகளின் மேல் நிலைத்தது.

"ஏ ராசாத்தி!"

"....."

"ஏண்டி கழுதே! பொணமாட்டமா தூங்குறே? பசி குடலைத் தின்னுது. ஏதாச்சும் வாங்கிட்டு வாடி" என்று மெலித்த குரலில் சொல்லி மகளை உசுப்பி விட்டாள் குஞ்சம்மா.

ராசாத்தி ஒரு தரம் புரண்டு படுத்தாள். எழுந்திருக்க வில்லை.

"அடி பஞ்சாரி! ஏந்திரிடி போய் பக்கிரிகிட்டே அரைக் கிளாஸ் சாயா வாங்கிட்டு வா. தூட்டு நாளேக்குத் தாரேன்னு சொன்னு குடுப்பான் போடி." என்று மீண்டும் மகளைக் கிளப்பினாள்.

ஆனால் ராசாத்தி கிளம்பினாள் தானே? அவளுக்குத்தெரியும், டீக் கடை பக்கிரி பழைய பாக்கியை ஞாபகப்படுத்தி பல்லை இளித்துக் கொண்டு அவளிடம் அசிங்கமாய் பேரம் பேசுவான் என்று.

அதை அவள் தாயிடம் ரோஷத்துடன் முறையிட்டாள்.

"அவனுக்கென்னடி ராசாவாட்டம்! வெளி ஆம்பிளங்களுக்கு அவன் ஒண்ணும் இளச்சவனல்லடி. அவன் ஒன்னைத் தொட்டுப்பிட்டா என்னடி மேலேயா கரைஞ்சிடும்? நீ எனக்குப் பொறந்தவதானேடி?" என்று பசி மயக்கத்திலும் காரமாகவே கேட்டுவிட்டுப் பெருமூச்சு விட்டாள், குஞ்சம்மா. "உம்!..... உன் வயசிலே நான் எம்மாம் பணம் சம்பாரிச்சேன் தெரியுமா?" என்று ஏங்கினாள்.

"ஆமா. சம்பாரிச்சு என்னத்தைக் கண்டேயாம். அரைக் கிளாஸ் சாயாத் தண்ணிக்கு நாதியில்லாமே நோக்காடு வந்து படுத்துக் கெடக்கியே!" என்று தாயை மடக்கினாள் ராசாத்தி.

"ஏண்டி பத்திவி மவளே! நான் வயறு காஞ்சிப் போய் உசிரை விட்டுக் கிட்டு இருக்கேன். நீ இப்படியே பேசிட்டுப் போறே? பேசாம என் கழுத்தை நெறிச்சிரு டீ. நான் நிம்மதியா போயிடு றேன்," என்று கோபத்தினால் நிணறித் திணறிப் பேசிய குஞ்சம்மா பசியின் வேதனை உடல் நரம்புகளின் இயக்கத்தை அமுக்கி சக்கை முடியாத குறுகுறுப்பை உண்டாக்குவதை உணர்ந்தவளாய் விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். இதுவரையில் அவள் இந்த மாதிரி இரண்டு நாட்களாய் தொடர்ந்து பட்டினி கிடந்த தில்லை.

"நானுந்தானே ஒன்னோடு பட்டினி கிடக்கிறேன். நான் என்ன செய்யணுங்கிறே நீ?" என்றாள் ராசாத்தி.

"அடியே ராசாத்தி! முதலாட்டம் விட்ட நேரமாவுது. இப்படியே சங்ஙன் வரையிலும் ஒரு நடை போய்ட்டுவந்தா போதுமே. உன் லட்சணத்துக்கு எத்தினிபேர் காசோடே உன் பின்னே வர மாட்டாங்க? போடி! போய்ட்டு வாடி...."

"ஏ! அந்தப் பொழப்பு மட்டும் சொல்லாதே ஆமா. உன் சென் மத்தோட அது போவட்டும். எங் கிட்டே சொல்லாதே. நானேக்கு விடிஞ்சா மறுபடியும் கல்லு உடைக்கப் போறேன். நானே பொழுது கழிஞ்சா கஞ்சி காச்சிக் குடிக்கலாம்..."

"அது மட்டுக்கும் உசிரை யார் பிடிச்சி நிறுத்தறது... நான் செத்து தருவேண்டி, என் மவளே! ஒன்னே ஆளாக்கி விட்டேனே. உன் சொகுசுக்கு ஆம்பிளேங்க நூறு நாறு கொட்டுவாங்கன்னு கனவு கண்டேனே பாவி! இப்படி என்னே பட்டினி போட்டு சாகடிக்கத் தானு? அடி பாவி மவளே....." என்று மீண்டும் தலையில் அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள் குஞ்சம்மா.

குஞ்சம்மா பிறக்கும் போது நிறத்தோடும் அழகோடும்தான் பிறந்தாள். வளர்ந்தபோது அழுதையாக வளர்ந்தாள். அவளைப் பெற்றவர்கள் யாரென்று அவளுக்கே தெரியாது. அன்பு, பாசம் இவை எல்லாம் அவளுக்கு யாரிடமிருந்தும் கிட்டவில்லை.

ஆனல் அவள் பருவம் அடைந்ததும் அந்த நிலைமை எப்படி எல்லாம் மாறிவிட்டது! எத்தனை மைனர்கள் வட்ட மிட்டனர்! பாசத்தையும் பணத்தையும் காட்டி அவளது அழகுக்குப் பின்னல் பலபேர் வந்தபோது அவளுக்கு அது பெருமையாக இருந்தது. தன்னை அனுதையாக்கிய உலகத்

தைப் பழி வாங்குபவளைப் போல், வந்தவர்களையெல்லாம் உறவாக்கிக் கொண்டாள் அவள்!

அவளுக்கு இப்படியொரு வாழ்க்கைக்கு வழி காட்டியவனுமிய முத்தண்ணன் என்ற ஒன்றரைக் கண்ணனிடம்அவள் நன்றி விசுவாசத்துடன் தனிப்பட்ட அன்புகாட்டி வந்தாள். அவன் குஞ்சம்மாவை நகர்ப்புறத்துக்கு அழைத்துச்சென்று தனிக் குடிசை போட்டு இரண்டு மாதம் அவளோடு தங்கியிருந்தான். அவனுக்கு பிறந்தவன்தான் ராசாத்தி.

ராசாத்தி வயிற்றில் இருக்கும் போதே அவன் கள்ளத்தோணி ஏறி இலங்கைக்கு ஓடிவிட்டான். குழந்தை உண்டாவதைப் பற்றி விசாரப்பட்டுக் கொண்டிருந்த குஞ்சம்மா, அது பிறந்ததும் தன்னையே உரித்துக் கொண்டு வந்திருப்பதைக் கண்டு ஏதோ ஒரு பாசத்துடன் ராசாத்தி என்று பேரிட்டு வளர்த்து வந்தாள். அத்துடன் தன் மாமூல் தொழிலையும் வளர்த்துக்கொண்டுவந்தாள். வருமானம் நிறையத்தான் வந்தது. ஆனால் அதெல்லாம் அதன் பின்னால் உண்டான கருவைக் கலைப்பதற்கும் உடம்பிலே படர ஆரம்பித்த படைகளை மறைப்பதற்கும்தான் சரியாக இருந்தது.

இருபதாண்டுகள் ஓடி விட்டன.

இன்று—

ஊரையெல்லாம் உறவாக்கிக் கொண்டதனால் அருவருப்பான தோல் நோய்கள் அவளது உடம்பில் நீங்காத உறவு கொண்டு விட்டன. சில வருடங்களாய், விகார மடைந்து போன அவளது மேனியை ஒருவனும் விலே பேச வருவதில்லே. ராசாத்தியோ பருவம் அடைந்த நாள் முதலாய் பூக்காரப் பாட்டி ஒருநாள் சொன்ன போதனைகளே நன்முக மனதில் பதித்துக் கொண்டு எச்சரிக்கை அடைந்திருந்தாள். தாயின் இழிந்த பிழைப்பைக்கண்டு அவள் மிகுந்த வெறுப்படைந்தாள். அந்த வழியில் கனவிலும் பிரவேசிப்பதில்லே என்று அவள் தனக்குள் சத்தியம் செய்து கொண்டாள். பருவம் அடைந்து இரண்டு வருடமாகியும் இன்னும் அவள் கனவித் தன்மை இழந்த தில்லே.

ஆனால், ஒருப்படியாகப் பிழைப்பதற்கு வேறு வழியே கிடையாது என்று எண்ணுகிற தன் தாயின் அறியாமையைக் கண்டு அவள் மனம் வருந்தாமலும் இல்லே. முள்ளிலே புரட்டி, தீயிலே வாட்டியது போல் உடம்பெல்லாம் கொடிய படை நோய்களே வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கும் தாயைக் கண்டு உள்ளம் கிழிந்தாள். தினமும் கிடைக்கிற இடத்தில் கூலி வேலே செய்து தன்னையும் தாயையும் கௌரவமாய் காத்து வந்தாள். இப்போது அவள் கல் உடைக்கிற இடத்தில் தவறிப்போய் சுத்தியை விரலில் போட்டுக் கொண்டதால் காயம் ஏற்பட்டு இரண்டு நாளாக அவள் வேலேக்குப் போகவில்லே. இரண்டு நாளும் பட்டினிதான்...

குஞ்சம்மா பகலின் வேகத்தில் முனகிக் கொண்டிருந்தாள். ராசாத்திக்கு அவள் மீது எள்ளு மில்லாத ஒரு பரிதாப உணர்வு ஏற்பட்டது.

"இதோ போறேம்மா. ஜங்ஷனிலே போயி பிச்சை கேட்டுப் பாக்கறேன். கிடைச்சா ஏதாச்சும் வாங்கிட்டு வாரேன். முணங்காமே படுத்துக் கிட" என்று கூறிவிட்டு, இருட்டில் ஒரமாய் இருந்த மண் குடத்திலிருந்து ஒரு குவளே குளிர்ந்த நீரைக் குடித்து விட்டு மெதுவாக வெளியேறினுள் ராசாத்தி.

இரவு மணி ஒன்பதரை இருக்கும்.

ராசாத்தி ரயில் பாலத்து வெவிச்சத்தில் நடந்து கொண்டிருந்தபோது எதிரேயிருந்து ஒரு மலிதன் தனியாக அவளே நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"காஞ்சி" உரிமை விளக்கம்

(பாரம் 4; விதி 8 காண்க)

1.	வெளியாகும் இடம்	...	86, திருக்கச்சிநம்பி தெரு காஞ்சிபுரம்-631503.
2.	வெளியிடும் நாட்கள்	...	வாரம் ஒருமுறை
3.	அச்சிடுபவர் பெயர்	...	சி. என். ஏ. இளங்கோவன்
	இனம்	...	தமிழர்
	முகவரி	...	86, திருக்கச்சிநம்பி தெரு காஞ்சிபுரம்-631503.
4.	வெளியிடுபவர் பெயர்	...	சி. என். ஏ. இளங்கோவன்
	இனம்	...	தமிழர்
	முகவரி	...	86, திருக்கச்சிநம்பி தெரு காஞ்சிபுரம்-631503.
5.	ஆசிரியர் பெயர்	...	சி. என். ஏ. இளங்கோவன்
	இனம்	...	தமிழர்
	முகவரி	...	86, திருக்கச்சிநம்பி தெரு காஞ்சிபுரம்-631503.
6.	பத்திரிகையின் உரிமையாளர் களுடைய பெயர்களும் முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ள வர்களின் பெயர்களும் முகவரியும்.		சி. என். ஏ. இளங்கோவன் 86, திருக்கச்சிநம்பி தெரு காஞ்சிபுரம்-631503.

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று சி. என். ஏ. இளங்கோவனுமிய நான் அறிவிக்கிறேன்.

31—3—74. (ஒப்பம்) சி. என். ஏ. இளங்கோவன்,
வெளியிடுவோர்.

வெளிவருகிறது!

'காஞ்சி'

அறிஞர் அண்ணு நினைவு சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணுவின் படைப்புக்களுடனே

கழகத் தலைவர் கலைஞர்

கழகப் பொதுச்செயலாளர் நாவலர்

அமைச்சர் பெருமக்கள் அருந்தமிழ்ச் சான்றோர்கள்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்
டாக்டர் ந. சஞ்சீவி
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
டாக்டர் சாகே. இளந்திரையன்
குருவிக்கரம்பை சண்முகம்
தாமரைக்கண்ணன்
இரா. கண்ணிமை
கருமலைப் பழம்நீ
ஏ. கே. வில்வம்
மணிவேந்தன்
பல்லவன்
அரிமதி தென்னகன்
கி. ந. ரா. அறிவுஒளி
தமிழ்ச் சுரபி
ஆத்தார் பன்னீர்ச்செல்வம்
எழிற்கோவன் மற்றும்

இனிய தலைமுறையின் இலட்சிய எழுத்தாளர்கள்

அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழிலிமிகு முகப்போடு
ஏப்ரல் திங்களில் வெளிவரவிருக்கிறது.

தேவைக்கு முன்கூட்டியே தெரிவிக்கவும். விலை ரூ. 3-00

மேலாளர், விவரங்கட்கு:

"காஞ்சி" அலுவலகம் :: காஞ்சிபுரம்-3.

"மலருக்கு" சேர்த்து சந்தா கட்டாத சந்தாதாரர்கள் ரூ. 3-00 அனுப்பி மலர் பெற்றுக்கொள்ளவும்

அவள் கொஞ்சம் தயங்கினாள். அந்த மனிதன் தன்னைக் கடந்து போகும் வரை வெளிச்சத்தில் நின்றுகொள்ளலாம் என்று சற்றே பின் வாங்கி பாலத்தின் ஓரத்தி லேயே நின்றுகொண்டாள்.

அவன் அவளை நோக்கி நெருங்கி வந்து கொண்டிருந்தான். முகத் தில் கறுப்பும் வெள்ளையுமாய் மீசையும் தாடியும் ஏகமாய் வளர்ந்து கிடந்தது. வெளிச்சத்தில் அவனது ஒன்றரைக் கண் தோற் றம் அவளுக்கு நன்கு புலப்பட்டு அந்த முகத்தை மேலும் விகார மாய்க் காட்டியது.

அருகில் வந்ததும் அவன் பிர மித்துப்போய் நின்றுவிட்டான்.

"அடே! என் குஞசம்மாவா! இங்கியா இருக்கே?....." என்று கரகரத்த குரலுல் அவன் ஏதோ சொல்லிக் கொண்டே அவளைத் தொடுவதற்குக் கைகளை நீட்டிய போது ராசாத்தி மிரண்டு போய் வந்த வழியே திரும்பி ஓட்டமாய் ஓடி குடிசைக்குள் நுழைந்து கொண்டாள். ஓடி வந்ததில் அவளுக்கு மூச்சு வாங்கியது. கண்கள் இருண்டு போனதைப் போல் ஒரு கணம் மயங்கிச் சுழன் றன. அந்த மனிதன் அவள் பின்னு லேயே வந்து குடிசையின் முன் பாக வந்து நின்றுள்.

"குஞ்சம்மா?" என்று ஒரு முறை அழைத்துவிட்டு அவனும் உள்ளே நுழைந்தான். வாசல் பக்கத்திலேயே பயந்து பேச்சற்றுப் போய் நின்றிருந்த ராசாத்தியை அப்படியே சேர்த்து வெறியோடு அணைத்துக் கொண்டு, "இன்னமும் உடம்பு தளராமே அப்படியே இருக்கியே, உன்னோட முத்தண் ணன் வந்திருக்கேன் பார், நேத் துத்தான் லங்கையிலிருந்து வந் தேன்;" என்றுள்'

அவனது அணைப்பிலிருந்து மிரிறிக்கொண்டு விடுபட்டு நின்ற ராசாத்தி முதன் முதலாக தன் உடம்பை யாரோ ஒரு வெறி யனின் கைகள் கட்டித் தழுவ விட்டு விட்ட அவமான த்தில் குறுகிப்போய் நின்றுள்.

அவன் யாரோ ஒருவனு?

அவளது தாய் குஞ்சம்மா இருபது வருடத்துக்கு முந்திய நினைவுகளில் மயங்கித் தினத்தவ னாய் ஒன்றரைக் கண்ணை வைத்துக்கொண்டு அவளுக்குப் பெருமையுடன் அறிமுகப் படுத்திய போது.....

அவள் வெளியேறி ஓடினுள். ரயில் பாலத்துக்குத் தென்புற மாக, எதிர்புற சாலியின் ஓரமாய் இருந்த தண்ணீர் இல்லாத ஒரு பாழுங்கிணறு அவளை வரவேற்றது.....

குப்பையில் வந்து மூளைத்த அந்த குருக்கத்தி மலர், அதோ வெற்று உடம்பாய், நிணற்றுக் குள்ளே ரத்தச் தெறல்களுக்கு மத்தியில் நைந்து விழுந்து கிடக்கிறது. பிரித்து விட்ட அந்த உயிரை இனிமேல் எந்த அவமான மும் விகாரமும் பற்றிக் கறைப் படுத்த முடியாது தான்.

"பீடை தொலையட்டும் நான் இங்கே இருக்கேன். இப்படி வாருங்!....."

பழைய நினைவுகள் வயிற்றுப் பசியை மறக்கடிக்க, பல காலமாய் மறுக்கப்பட்டிருந்த மற்றொரு பசியை முதலில் தீர்த்துக் கொள் ளும் தாபத்துடன் குஞ்சம்மா இருட்டில் இருந்தபடியே முத்தண்ணனை அழைத்தாள்.

✇

'குட்டிக் கதைகள் ஒரு நூறு!'

— புலவர். அரிமதி தென்னகன்

39. புதுமுகம்

பெயர் வில்லிதேவி.

அவள் ஒரு புதுமுகம்.

பழம் பெரு டைரக்டருடன் பேசிக் கொண்டிருந்தாள் அவள்.

அப்போது,

வேடுறுரு படமுதலாளி ஆறே மாதத்தில் அகில இந்திய நட்சத்திரமாகத் தன்னை ஆக்கி விடுவதாகச் சொன்னவனை அவள் சொன்னாள்.

டைரக்டர், "அதெல்லாம் சுத்தப் பொய்; அவனியெல்லாம் நம்பாதே" என்றார்.

அவள், தன் முகத்தில் சந்தேகச் சாயலே மேயவிட்டாள்.

அவ்வளவுதான்,

"இதோ பார் வில்லி, சிவிமாக் காரப் பசங்களுக்குப் பொய்யும், புளுகுந்தான் முதலீடு; அதை யெல்லாம் நம்பாதே.

நான் உன்னை நாலேயாரத்தில் அகில உலக நட்சத்திரமாக ஆக்கிக்காட்டுகிறேன்.

"என்னை நம்பு"

என்று சொல்லிய டைரக்டர் நிமிர்ந்துபார்த்தார்.

புதுமுகம் போய்க் கொண்டிருந்தாள்.

ஏன்?

டைரக்டரும் சிலிமாக்காரன் தானே.

பழைய முகத்திற்குப் பிறந்த புதிய முகத்திற்கு இதுகூடவா புரியாது"

40. கேள்வி பதில்

சுவரிலிருந்த கடிகாரத்தைக் காட்டி ஒரு குழந்தை தன் தாயிடம்,

"அம்மா, இந்தக் கடிகாரத்தில் அப்பா முள் எது? அம்மா முள் எது?" என்று கேட்டது.

தாய் கேட்டாள்:-

"பெரிய முள் ஓடினுள்தான் சின்னமுள் நகரும். இப்போது நீயே சொல்; எது அம்மா முள்?"

குழந்தை உடனே பதில் சொன்னது:-

"பெரியமுள்"

41. நாமம் வாழ்க

"ஆறுமுகம், ஒருவனைக் கொலை செய்யவேண்டும்; ஆனால் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. அதற்கு ஏதாவது வழியிருந்தால் சொல்லேன்"

தன்னிடம் வழிகேட்ட அப்பாசாமிக்கு ஆறுமுகம் கிழவருமாறு வழி சொன்னான்.

"நீ கொல்ல விரும்பும் ஆளின் பெயரைப் புதியதாகக் கட்டிய வீட்டிற்கு வைத்துவிடு.

"நொடிக்கு நூறு தரம் அவர் நாமம் வாழ்க! வாழ்க! என்று சொல்லிக்கொண்டே இரு"

ஆறுமுகம் சொல்லிய வழியைக் கேட்ட அப்பாசாமி என்ன சொன்னான் தெரியுமா?

"ஆறுமுகம் நாமம் வாழ்க"

42. 'மகாஜனம்'

மேஜைட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவர் இந்தியாவிற்கு வந்தார்.

இந்திய மக்களின் அறிவாற்றல்பற்றி நேரில் அறிந்து கொள்ள விரும்பினார் அவர்.

அப்போது தேர்தல் நேரம்.

கடுமையான தேர்தல் களமாக மதிக்கப்பட்ட ஒரு தொகுதியின் மக்களைப் பற்றிப் புரிந்து கொண்டாலே இந்தியாவைப் பற்றித் தெரிந்து கொண்டதாகுமே என்று கருதினார்.

எனவே,

அந்தத் தொகுதியில் வெற்றி பெற்றவரைச் சந்தித்தார்.

"உங்கள் வெற்றி பற்றி உங்கள் கருத்து என்ன?"

நிருபர் கேட்டார்.

"இமயம்போல் உயர்ந்த, வானம் போல் பரந்த, கடல்போல் ஆழமான வெற்றி என் வெற்றி"

"எதனல்?"

வெற்றி பெற்றவர் விளக்கினார்

இப்படி:-

"என்னை எதிர்த்தவர் பெரிய மேதை; மாபெரும் தியாகி;

ஒழுக்கமானவர்;

இந்தத் தொகுதி மக்களுக்காக இருந்த சொத்தையெல்லாம் இழந்தவர்; சுருக்கமாகச் சொன்னுல் காந்தியின் மறுபிறவி.

இவர் என்ன? அந்த காந்தியே வந்தாலும் நான்தான் வெற்றி பெறுவேன்..."

அப்போது,

அரைகுறை ஆடையணிந்த ஒரு பெண் கண்ணுடிக் குவளையைக் கொண்டு வந்து வைக்கிறாள்.

அதை, வைத்தவாய் எடுக்காமல் கண்ணைமூடிக்கொண்டு குடித்த வெற்றி வீரர் நிமிர்ந்து பார்த்தார்.

மேஜைட்டு நிருபர் அங்கு இல்லை.

இந்தியாவைச் சுற்றிப்பார்த்து அவர் இனி தெரிந்து கொள்ள வேண்டியது என்ன இருக்கிறது!

வாழ்க 'மகாஜனங்கள்'

காரணம்?

தோற்றவர்க்கு 'டிபாசிட்' பறிபோகவில்லையாம்!!

43. இரு முட்டாள்கள்

"மூட்டாளை அடையாளங் கண்டுகொள்வது எப்படி?"

என்னை என் நண்பன் கேட்டான்.

நான் சொன்னேன்,

"அவன் எப்போதும் முட்டாள்களை அடையாளங்கண்டு கொள்வதிலேயே நேரத்தைச் செலவழிப்பான்"

நண்பன் சிரித்துக் கொண்டே,

"தன் எதிரிலேயே இருந்தால் கூட....." என்று சொல்லிக் கொண்டே போனுன்.

★

கவிதைப் பூங்கா

எங்கும் தங்கும் இறை

(புலவர் து. அரங்கன்.)

நீலவானக் கோலத்தில் வண்ண உடுக்கள்
நீந்திவிளை யாடுகின்ற நேர்த்தி தன்னில்
கோலவிழி காட்டிநிற்கும் விண்மீன் தன்னில்
கொட்டுகின்ற வெண்ணிலவின் குளிர்ச்சி
ஒலமிடும் கடற்பரப்பில் மிதக்கு வானில் [தன்னில்
ஒளிவெள்ளக் கூட்டத்தில் உதயக் கதிரில்
சோலைகளின் பூக்காட்டில் சொக்க வைக்கும்
கருப்பாரின் தேன்பாட்டில் இறையைக்
கண்டேன்.

வைகறையில் எழுகின்ற புள்ளின் பாட்டில்
வெண்பனியில் தூங்குகின்ற பொய்கை தன்னில்
மைவிழியார் வாள்வீச்சில் நடையில் பேச்சில்
மாவீரன் தடந்தோளில் வீர வாளில்
கையிழத்தார் காலிழந்தார் பார்வை தன்னில்
ஐயமிடும் அருளுடையார் நெஞ்சு தன்னில்
ஐயமின்றி 'இயற்கை இறை' இருக்கக் கண்டேன்
ஆனந்த நடமங்கே புரியக் கண்டேன்.

தாய்மடியில் யாழொலியில் மழலைப் பேச்சில்
தன்னினத்தை அழைத்துண்ணும் காக்கை
அன்பில்
தாய்நாட்டின் தன்மொழியின் மானங் காக்கத்
தன்னுயிரை ஈந்தோரின் தியாகந் தன்னில்
வாய்மணக்கத் தமிழ்போற்றும் வாழ்வு தன்னில்
வணங்குகின்ற பணிவுடையார் சால்பு தன்னில்
ஆய்ந்தறிய முடியாஅவ் விறையைக் கண்டேன்
ஆலயங்கள் அவையன்றி வேறும் உண்டோ?

★ ★ ★

எப்படி சொல்வேன்

(கவிஞர். கருமலைத்தமிழாழன்)

எப்படி சொல்வேன் தோழி-இரவு
என் காதலன் செய்ததெலாம் —எப்படி

கொல்லியிலே பூத்த தென்முல்-நான்
குத்தும்விழி பார்த்து நிற்க
முல்லையிதோ என்று கூறி-இதழ்
முத்தம்நூறு வெளுக்க வைத்தான்! —எப்படி

பந்திரண்டு விம்மு தென்முல்-நான்
பக்கத்திலே மயங்கி நிற்க
முந்தானையை விலக்கி விட்டு-உடல்
முழுவதுமாய் அணைத்துக் கொண்டான்! —எப்படி

வெண்ணிலவில் தென்ற வென்முல்-நான்
வெட்கமுடன் கோல மிட்டேன்
கண்ணிரண்டில் செம்மை ஏற-இன்ப
காதலிசை மீட்டி விட்டான்! —எப்படி

இருளிலிலே புதுமை என்முல்-நான்
இருக்கட்டும் என்று சொல்ல
அருகினிலே மெல்ல வந்து-புது
அச்சாரம் பதித்து சென்முல்! —எப்படி

★ ★ ★

காதலின் கவிமடல்!

(ப. நா. கலீல்சுந்தரம்)

வழிமேல் விழிவைத்து வருவார் வருவாரென
விழிநீர் சிந்துகின்ற எழில்கொஞ்சும் ரோஜாவே!
என்மனக் கொந்தளிப்பை எழுதுகிறேன்
கவிதையிலே!
கதிரவன் பார்வையினுல் கமல முகம் சிவக்கும்
காளையின் பார்வையினுல் கன்னியின் முகம்சிவக்கும்
காதலால் ஒருமித்த கதிரவனும் காளையும்,
கமலமும் கன்னியும், கண்மூடிக் கிடக்கின்றீர்!
காலத்தை மறக்கின்றீர்! நானே.....!
நானெல்லாம் பார்க்கின்றேன் நாவிலிக்கப்
பேசுகின்றேன்
என்னதான் பலனுண்டு?எல்லாமே பொழுதுபோக்கு;
மொட்டவிழ்த்த தாமரையை முழுதிலவில்
சாய்க்கவும்,
கட்டவிழ்த்த கூந்தல் காலடியை தழுவவும்,
பட்டாடை விரித்திட்ட பஞ்சணையில் சுவைக்கவும்
எட்டியிருக்கும் இளநெஞ்சம் இயம்புதை கேளாயோ!
சிற்றிடை தள்ளாட சிரிக்கின்ற செங்கவியை
பொற்சரம் இதழ்விரித்துப் பொன்னுடலை தழுவவும்,
மாந்தளிர் மேனியிலே மச்சங்கொண்ட மான்விழியே!
பூந்தென்றல் தேரேறி புதுஉலகம் போகமாட்டேன்!
அச்சத்தை மறந்திடவும் அரவணைப்பில் கலந்திடவும்
இச்சிக்க நினைக்கின்றேன், ஏனெனு! ஒரு பயம்.
விழிதிறந்த போதெல்லாம் நிழலாக வருகின்றீர்!
விழிமூடிய பின்னுலும் வேதனையைத் தருகின்றீர்!
கனவென்னும் சொர்க்கத்தில் காண்பதெலாம்
உன்வடிவம்.
என்னை தனிக்கவும்; ஏக்கத்தைத் தீர்க்கவும்,
உன்னை அழைக்கவோ! என்நெஞ்சில் துணிவில்லை.
நீயாய் அழைத்தாலன்றி; நானுய் வரமாட்டேன்.

(உரைநடை கவிதை)

பன்னிரண்டு ஆண்டுகளில்
வருவாய் இரட்டிப்பாகிட
தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்,
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய தைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிட்டவர் தி. ஏண். ஒ. நொல்கோபால் அவர்களால், காஞ்சிபுரம்-3.
86, திருக்கச்சிநம்பித் தெரு, ஆனி அச்சகத்தில் (போன்: 2870) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.